1975 ஏப்ரல் 18]

Memorial arch for Periyar in Salem.

* 714 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Revenue be pleased to state :—

(a) whether the Government have permitted any arch to be erected on the Salem—Sankari road in Salem district in memory of Periar Thiru E. V. R.; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) & (இ) சேலம் மாவட்டத்தில், சேலத்திலிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் திருச்சி—சேலம் சாலையில் திரு. பெரியார் ஈ. வெ. ரா. அவர்களின் 95-வது பிறந்த நாள் நினைவு வளைவு எழுப்புவதற்கு கோயம்புத்தூர் மேற்பார்வை பொறியாளர் (நெடுஞ்சாலை) அனுமதி வழங்கி உள்ளார்.

திரு. தி. பொன்னுமலை : தலைவர் அவர்களே, சேலத்திலிருந்து சங்ககிரி போகும் வழியிலே என்னுடைய தொகுதியிலே உள்ள குண்டலாம்பட்டியிலே காந்தியடிகள் சிலையை என்னுடைய தலைமையிலே பெருந்தலைவர் காமராஜர் வந்து திறப்பதாக இருந்தது. ஆனால் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி பெரியார் நினைவு வளைவு வைக்க அனுமதிப்பது பற்றித்தான்.

திரு. தி. பொன்னுமலை : என்னுடைய தொகுதியிலே காந்தியடிகள் சிலையை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய தொகுதியாக இருந்தாலும் கூட கேள்வி பெரியார் நினைவு வளைவைப்பற்றித்தான், ஆகவே அதைப்பற்றி மட்டும் கேளுங்கள்.

திரு. தி. பொன்னுமலை : அங்கே காந்தியடிகள் சிலையை பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் திறப்பதாக சொல்லியும் அது அனுமதிக்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அதுமாதிரிச் செயற் குறிப்பு எதுவுமே வரவில்லை.

[1975 ஏப்ரல் 18

புலவர் சி. பழனிச்சாமி : பகுத்தறிவுக் கருத்துக்களுக்கு அடிப் படையாக இருந்த தந்தை பெரியார் அவர்கள் பெயராலே அனாதை இல்லங்களைத் தொடங்குவதற்கு யாராவது முன்வந்தால் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுவெல்லாம் இந்தக் கேள்வி யிலே வராது. பெரியார் நினைவு வளைவுக்கு அனுமதிகொடுக்கப் டிருக்கிறதா என்பது பற்றித்தான் கேள்வி.

திரு. எம். சுரேந்திரன் : சேலத்திற்கு அருகாமையிலே பெரியார் நினைவு வளைவு அமைப்பதற்கு அனுமதி வழங்கியதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த அனுமதியை யார் பெற்றார்கள்? எந்த அமைப்பின் பெயரால் ஏற்படுத்தப்படுகிறது? எப்போது ஏற்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : சேலம் நகர திராவிடர் கழகத் தலைவர் அனுமதிகோரியிருந்தார், அனுமதியளிக்கப்பட்டிருக் கிறது. பிறகு சில நிபந்தனைகளோடு அமைக்கவேண்டுமென்ற காரணத்தினாலே தாமதமாகத் துவக்கினார்கள். இப்போது வேலை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

கிராமக் கணக்குகள்

* 715. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) கிராமக் கணக்குகளைக் கவனிக்க இயந்திர முறையை அரசு அமலுக்குக் கொண்டுவந்துள்ளதா?

(இ) இப்பணி தற்பொழுது 25 வட்டங்களில் அமல் நடத்தப் படுகின்றது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(இ) ஆமெனில், இப்பணி எத்தனை இடங்களில் அமல் நடத்தப் படுகின்றது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இந்தப் பணி தஞ்சை மாவட்டத்திலே எந்த எந்த இடங்களில் அமலாக்கப்பட்டிருக்கிறது என்பதை அறியலாமா?